



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 336 | 29.05.2026 | FRIDAY | VAIKASI : 15 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 336 | 29.05.2026 | வெள்ளிக்கிழமை | வைகாசி : 15 | விலை : ரூ.5/– |


## ஜூன் 11ல் சோனியா, ராகுல் காந்தி உடன்

# "முதல்வர் விஜய் சந்திப்பு"

## 'உங்களை உறுத்தவில்லையா?' கோடம்பாக்கம் சம்பவத்தை முன்வைத்து முதல்வர் விஜய்க்கு இபிஎஸ் கேள்வி



சென்னை: மே.29-

"முதல்வரே, எந்த குழந்தைகளை வைத்து நீங்கள் வாக்கு சேகரித்தீர்களோ, அதே குழந்தைகள் உங்கள் ஆட்சியில் பாதுகாப்பு இன்றி நிற்கின்றனர். இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "சென்னை கோடம்பாக்கத்தில் காவலர் உள்ளிட்ட மூவர் சிறுவனுக்கு வாயில் மது ஊற்றி, கொடும் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கியதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. சிறுவன் தன்னை தற்காத்துக் கொள்ள டிவி ரிமோட்டால் காவலரைத் தாக்கிவிட்டு தப்பி ஓடி, அசோக் நகர் காவல் நிலையத்துக்கு நடந்தே வந்து புகார் அளித்துள்ளதாக செய்திகள் வருகின்றன.

தமிழகத்தில் நாள்தோறும் பரிணமிக்கும் குற்றச் செயல்களின் தன்மை, மிகுந்த அச்சமூட்டுகிறது. முதல்வரே, எந்த குழந்தைகளை வைத்து நீங்கள் வாக்கு சேகரித்தீர்களோ, அதே குழந்தைகள் உங்கள் ஆட்சியில் பாதுகாப்பு இன்றி நிற்கின்றனர். இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

"சட்டம் ஒழுங்கு ஆய்வுக் கூட்டம்" என ஒன்றை நீங்கள் நடத்தியதாக ஒரு வீடியோவை உங்கள் அரசு வெளியிட்டது. அது மற்றுமொரு சம்பிரதாயத்துக்கான கூட்டமாக மாற்றி விடப்பட்டு உள்ளதோ என்ற சந்தேகங்கள் வலுப்பெறுகிறது. வேலியே பயிரை மேயும் கொடூரம் நடப்பது உங்கள் மனதை உறுத்தவில்லையா?

சிறுவனுக்கு நேர்ந்துள்ள இந்த கொடுந்துயருக்கு காரணமான கொடூரர்கள் யாராக இருப்பினும், அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இனியேனும் "கோட் சூட் போட்டோஷூட்" மாடல் ஆட்சியை கைவிட்டு, சட்டம் ஒழுங்கைக் காக்க உணர்வோடு செயல்பட வேண்டும் என பொய்க்கால் குதிரை அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்டோபர் திலக் தகவல்



புதுடெல்லி: மே.29-

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களை முதல்வர் விஜய் ஜூன் 11ம் தேதி சந்திப்பார் என காங்கிரஸ் எம்.பி கிறிஸ்டோபர் திலக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் கிறிஸ்டோபர் திலக், "முதல்வர் விஜய் தனது இந்த டெல்லி பயணத்தை முழுக்க முழுக்க அரசியல் பயணமாக வைத்துக்கொள்ளலாம் என முடிவெடுத்துள்ளார் என நினைக்கிறேன். தற்போது பிரதமரை சந்தித்து சென்றுவிட்டார்.

அடுத்ததாக ஜூன் 11ம் தேதி முதல்வர் விஜய் டெல்லி வருகிறார். அப்போது அவர் சோனியா காந்தியையும் ராகுல் காந்தியையும் கண்டிப்பாக சந்திப்பார்.

கர்நாடக காங்கிரஸ் தலைவர்கள் பலர் இன்று டெல்லி வந்துள்ளனர். அதோடு, ஜார்க்கண்ட் மாநிலத்தின் மாநிலங்களவை உறுப்பினர் விவகாரம் தொடர்பாக கடந்த இரண்டு நாட்களாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில் முதல்வரோடு சகஜமாக பேச முடியாத நிலை ஒரு காரணமாக இருக்கலாம் என நான் நினைக்கிறேன்.

டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சிலை திறப்பு விழாவையும் விஜய் ஒத்திவைத்துள்ளார். எனவே, முதல்வர் விஜய், காங்கிரஸ் தலைவர்களைச் சந்திக்காதது குறித்து கேள்வி எழுப்ப ஏதுமில்லை" என தெரிவித்தார்.

## ரீல்ஸ் மூலம் முதலீட்டை ஈர்க்கும் அமைச்சர் கீர்த்தனா விமர்சனமும் வரவேற்பும்

சென்னை: மே.29-

தமிழக தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா வெளியிட்ட ரீல்ஸ் பதிவில், 'தமிழகம் எதிர்காலத்திற்காக காத்திருக்கவில்லை, அதை நாங்கள் கட்டமைக்கிறோம். கோப்புகள் மற்றும் ஒப்புதல்களுக்காக நீண்ட காலம் காத்திருக்க வைக்கும் அரசை யாரும் விரும்புவதில்லை. அதனை சரிசெய்யவே முதல்வர் விஜய் என்னை நியமித்துள்ளார்.

நமது அரசு 21 நாட்களில் விரைவான அனுமதி மற்றும் ஒற்றைச் சாளர ஒப்புதல்களுக்கு உறுதியளிக்கிறது. பிரச்சினைகளை என்னிடமும், முதல்வரிடமும் நேரடியாக கொண்டு செல்லலாம் என்று உறுதியளிக்கிறோம்.

ஏஐ நகரங்கள் முதல் பசுமை ஹைட்ரஜன், மேம்பட்ட உற்பத்தி மற்றும் விண்வெளிப் பொருளாதாரம் என பல புதுமைகளை செயல்படுத்தும் ஒரு சூழலை எங்கள் அரசு உருவாக்குகிறது.

முதல்வர் ஜோசப் விஜய்யின் தொலைநோக்கு தலைமையின் கீழ், தமிழகத்தை இந்தியாவின் முதலீடு மற்றும் கண்டுபிடிப்புகளின் மையமாக மாற்ற உறுதிபூண்டுள்ளோம். எதிர்காலம் இங்கே உள்ளது. எனவே தமிழகத்தில் முதலீடு செய்யுங்கள்' என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரங்களில் ரீல்ஸ் மூலமாக கவனம் ஈர்த்த விருதை மகள் கீர்த்தனா, இப்போது தொழில் துறை அமைச்சரான பின்னரும் முதலீடுகளை ஈர்க்க அதே ரீல்ஸ் வழிமுறைகளை பயன்படுத்துவது சமூக வலைதளங்களில் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

அனைத்து தரப்பையும் சென்று சேரும் வகையில், அமைச்சர் கீர்த்தனா ரீல்ஸ்களை வெளியிட்டுள்ளார் என ஒரு தரப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது. அதே நேரத்தில், வெளிநாடு மற்றும் உள்நாட்டு தொழில் முதலீடுகளை ஈர்க்க ரீல்ஸில் அழைப்பு விடுப்பது பொருத்தமானதாக இருக்குமா என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளது.

## நெஞ்சை உறைய வைக்கும்...

# உயர் நீதிமன்ற நீதிபதிகளின் அதிரடி வாக்குமூலம்!

## நீதிமன்றத்திலும் ஊழல் உள்ளது, யாரும் மறுக்க முடியாது!"

மக்களாட்சியின் மிக முக்கிய தூணாகவும், எளிய மக்களின் இறுதி நம்பிக்கையாகவும் விளங்குவது நீதித்துறை. ஆனால், சமீபகாலமாக இந்த உயரிய இடத்திலும் ஊழல் என்ற கறை படிந்திருப்பதாக எழும் விமர்சனங்கள் கவலையை ஏற்படுத்தியுள்ளன. "நீதிமன்றத்திலும் ஊழல் உள்ளது" என்று உயர் நீதிமன்ற நீதிபதிகளே சில தருணங்களில் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளது, என சட்ட வல்லுநர்களுக்கும், சட்டம் அறிந்தவர்களுக்கும் அதிர்ச்சியூட்டுவது மட்டுமின்றி, மனித குலமே நடுங்கிப் போயிருக்கிறது என்கின்றனர்.

**ஊழலின் வடிவங்களும் காரணங்களும் :**

நீதித்துறையில் ஊழல் என்பது தீர்ப்புகளை விலை பேசுவதுடன் மட்டுமின்றி, பல்வேறு வடிவங்களில் நிகழ்கிறது:

**நடைமுறைத் தாமதங்கள்:**

கீழ் நீதிமன்றங்களில் மனுக்களைப் பட்டியலிடுவது, நகல் எடுப்பது போன்ற அன்றாட பணிகளில் 'கைமாற்று' வாங்கும் வழக்கம் இருப்பதாகப் புகார்கள் உள்ளன.

**இடைத்தரகர்கள் பிணைப்பு:**

சில நேர்மையற்ற இடைத்தரகர்களும் வழக்கறிஞர்களும் நீதிபதிகளின் பெயரைக் கூறி, சாதகமான தீர்ப்பு வாங்கித் தருவதாக வழக்காடிகளிடம் பெருந்தொகை பறிக்கின்றனர்.

**வெளிப்படைத்தன்மையற்ற நிலை:**

மேனாள் நீதிபதிகள் பலரே ஓய்வுக்குப் பின் நீதித்துறையின் செயல்பாடுகளில் உள்ள வெளிப்படைத்தன்மையற்ற நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**ஏற்படும் விளைவுகள்:**

"தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம்". நீதிமன்றங்களில் ஊழல் மலியும்போது ஏழை, நடுத்தர மக்களின் நீதிக்கான புகலிடம் பறிபோகிறது. பணபலம் உள்ளவர்கள் சட்டத்திலிருந்து தப்பிக்கும் நிலை உருவானால், அது 'சட்டத்தின் ஆட்சி' மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதைத்து, அராஜகம் தலைதூக்க வழிவகுக்கும்.

பரிந்துரைக்கப்படும் தீர்வுகள்:

நீதித்துறையின் தூய்மையைக் காக்க முன்வைக்கப்படும் முக்கிய சீர்திருத்தங்கள்:

**முழுமையான டிஜிட்டல் மயமாக்கல்:**




வழக்கு விவரங்கள், பட்டியலிடுதல் போன்றவற்றை ஆன்லைன் மயமாக்குவதன் மூலம் இடைத்தரகர்களைத் தவிர்க்கலாம்.

**கண்காணிப்பு அமைப்பு:**

புகார்களை விசாரிக்க சுதந்திரமான 'உள் புகார் தீர்ப்பாயம்' வலுப்படுத்தப்பட வேண்டும்.

வெளிப்படையான நியமனம்:* கொலிஜியம் முறையில் கூடுதல் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

**கறாரான தண்டனைகள்:**

ஊழலில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் நீதிபதிகள் மீது பாரபட்சமின்றி கடுமையான தண்டனைகள் பாய வேண்டும்.

**சக்கரவியூகம் வாய்ஸ்:**

"வேலியே பயிரை மேய்ந்தால்" சாமானிய மனிதன் நீதிக்காக எங்கே போய் நிற்பான்? நீதிமன்றங்களில் உள்ள ஊழல் களைகளைக் களைந்தெறிந்து, அதன் புனிதத் தன்மையைக் காப்பது சட்டத்தின் கடமை மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும். இன்றும் பல நேர்மையான நீதிபதிகளின் அதிரடித் தீர்ப்புகளால்தான் சாமானிய மனிதன் நிம்மதியாக வாழ முடிகிறது என்றாலும், அமைப்பில் ஊடுருவியுள்ள கரும்புள்ளிகளைத் துடைத்தெறிந்தால் மட்டுமே "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்ற கோட்பாடு உண்மையான வடிவம் பெறும் என்பதே மாண்புமிகு என்ற அடைமொழிக்கு காரணமாக இருக்கும் மனித குலத்தின் கறாரான பார்வை!

**மாமா: (டீயை உறிஞ்சிக்கொண்டே) ஏலேய் மாப்ளே... மக்களாட்சியோட நாலு தூண்ல எளிய மக்களோட கடைசி நம்பிக்கையே இந்த நீதித்துறைதான்டா. ஆனா, அங்கேயும் இப்போ 'கைமாற்று' வாங்குற பழக்கம் வந்துருச்சுன்னு வர்ற புகாரைப் பார்த்தா நெஞ்சு பொறுக்கலடா.**

**மாப்ளே: அடக் கொடுமையே! அப்போ இதுக்குத் தீர்வே இல்லையா மாமா?**

**மாமா: தீர்வு இல்லாம என்னடா? எல்லாத்தையும் முழுசா 'டிஜிட்டல்' மயமாக்கணும். கேஸ் விபரம், லிஸ்டிங் எல்லாம் ஆன்லைன்ல வந்தா இந்த இடைத்தரகர் பயலுக வேலைக்கே ஆக மாட்டானுங்க. அப்புறம், தப்பு பண்ற கோர்ட் ஊழியரோ... யாரா இருந்தாலும் பாரபட்சம் பார்க்காம சவுக்கடி குடுக்கணும்.**

**மாப்ளே: நீங்க சொல்றது நிஜம்தான் மாமா. ஆனா இப்போவும் பல நேர்மையான நீதிபதிகளோட அதிரடித் தீர்ப்புகளாலதானே சாமானியன் நிம்மதியா வாழ முடியுது?**

**மாமா: அதுதான்டா உண்மை! ஒட்டுமொத்த அமைப்பும் கெட்டுப் போகல. அங்கங்க இருக்குற கரும்புள்ளிகளை மட்டும் களைந்தெறிந்து கோர்ட்டோட புனிதத்தன்மையைக் காக்க வேண்டியது நம்ம சமூகத்தோட கூட்டுப் பொறுப்பு. அப்பதான் "சட்டத்தின் முன் அனைவரும் சமம்"ங்கிறது நிஜமாகும்!**

**மாப்ளே: செம மாமா! நீதிமன்ற மாண்பைப் பத்தி முச்சந்தியில இன்னைக்கு 'சாட்டையடி' விவாதம் பண்ணிட்டீங்க. சரி, வாங்க... கோர்ட் டைம் ஆகப்போகுது, அந்த 'ஸ்மார்ட் சிட்டி' ரோடு பள்ளத்துல விழாமப் பார்த்துப் போவோம்!**

***மாமா:* ஏலேய்... வண்டிய மெதுவா ஓட்டுடா... போவோம்!**



## காலை 6 டு மாலை 5 மட்டுமே அனுமதி! பழைய குற்றாலத்தில் பிளாஸ்டிக், மதுபானங்களுக்குத் தடை... மீறினால் ஆக்ஷன்

தென்காசி, மே.29-
தென்காசி மாவட்டம், பழைய குற்றாலம் அருவியினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் இ.ஆ.ப, மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா. ராஜ்மோகன் இ.வ.ப, மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேரில் தணிக்கை செய்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர், பழைய குற்றாலம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் அமைந்துள்ளதால், மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி அருவிப் பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள், சோப்பு, ஷாம்பு, எண்ணெய், மதுபானங்கள் மற்றும் தீப்பற்றக்கூடிய பொருட்களைப் பயன்படுத்த முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், பயணிகளின் பாதுகாப்பைக் கருதி காலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை மட்டுமே சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர் என்றும், விதிமுறைகளை மீறுவோருக்குக் கடுமையான அபராதமும், சட்டப்படியான நடவடிக்கையும் பாயும் என்றும் எச்சரித்தார்.

இந்நிகழ்வில் தென்காசி வனச்சரக அலுவலர் செல்லதுரை, குற்றாலம் பிரிவு வனவர் சங்கர் ராஜா, குற்றாலம் வனப்பூரணி சூழல் மேம்பாட்டு குழு பாதுகாவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பினராய் விஜயன் இல்லத்தில் ஈடி ரெய்டு? தலைவர்கள் கைது... மோடி அரசுக்கு எதிராக அவிநாசியில் கம்யூனிஸ்ட்டுகள் அனல் பறக்கும் முழக்கம்

அவிநாசி, மே.29-
பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு அமலாக்கத்துறையைத் தவறாகப் பயன்படுத்தி ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் கண்டித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஐஎம்) சார்பில் அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*போராட்டத்திற்கான பின்னணி:*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும், கேரள முன்னாள் முதல்வருமான தோழர் பினராய் விஜயன் அவர்களின் இல்லம் மற்றும்



அலுவலகங்களில் ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை அராஜகமான முறையில் ரெய்டு நடத்தியுள்ளது. இந்த பழிவாங்கும் நடவடிக்கையைக் கண்டித்து டெல்லியில் ஜனநாயக முறையில் போராடிய கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் எம்.ஏ. பேபி உள்ளிட்ட அகில இந்தியத் தலைவர்களை டெல்லி காவல்துறை கைது செய்துள்ளது. ஒன்றிய மோடி அரசின் இந்த அராஜக நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்து அவிநாசியில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அவிநாசியில் நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ(எம்) ஒன்றியக் குழு உறுப்பினர் எஸ். வெங்கடாசலம் தலைமை தாங்கினார். இதில் கட்சியின் ஒன்றியச் செயலாளர் ஏ. ஈஸ்வரமூர்த்தி, மாவட்டக் குழு உறுப்பினர் ஆர். பழனிச்சாமி, மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஆர். வேலுச்சாமி, ஏ. ஜி. சண்முகம், ஆர். பாலசுப்பிரமணியம், வி. தேவி, ஏ. ராஜன், சி. பழனிச்சாமி, வி. தினகரன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு, ஒன்றிய பாஜக அரசுக்கும் டெல்லி காவல்துறைக்கும் எதிராக ஆவேசமாகக் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

## 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் அதிரடி மாற்றம் தேவை! பணித்தள பொறுப்பாளர்களை மாற்ற பால வீரவேல் கோரிக்கை

கடலூர், மே.29-
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (100 நாட்கள் வேலைத் திட்டம் விக்கித் பாரத் கேரண்டி ரோஜ்கார் மற்றும் ஆஜீவிகா மிஷன்) நீண்ட மாதங்களாகப் பணியாற்றி வரும் பணித்தள பொறுப்பாளர்களை நீக்கிவிட்டு, புதிய பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும் என்று இந்திய குடியரசு கட்சியின் கடலூர் மாவட்டத் தலைவர் பால வீரவேல் மாவட்ட நிர்வாகத்திற்குப் போர்க்கால அடிப்படையில் கோரிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் இத்திட்டத்தின் கீழ், கடந்த கால ஆட்சியில் தொழிலாளர்களை வேலை வாங்குவதற்காக நியமிக்கப்பட்ட பணித்தள பொறுப்பாளர்கள் பல மாதங்களாகத் தொடர்ந்து அதே பணியில் நீடித்து வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். இதனால் பல்வேறு முறைகேடுகளுக்கும் ஊழல்களுக்கும் வழிவகுப்பதோடு, தகுதி வாய்ந்த பிற இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு இத்துறையில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுவது தடுக்கப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு, அண்ணாகிராமம் ஒன்றியத்திற்குட்பட்ட சுந்தரவாண்டி, ஏய்தனூர் உள்ளிட்ட 42 கிராம ஊராட்சிகளில் பணியாற்றி வரும் பழைய பணித்தள பொறுப்பாளர்களை உடனடியாக நீக்கம் செய்து, புதிய பொறுப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்; தவறும்பட்சத்தில் இந்திய குடியரசு கட்சியின் சார்பாக அண்ணாகிராமம் ஒன்றிய அலுவலகம் முன்பு மிகப்பெரிய கண்டனப் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## மூன்று மொழிக் கொள்கையை தமிழகத்தில் திணிக்கக் கூடாது: ஒன்றிய அரசுக்கு ராமதாஸ் கண்டனம்

சென்னை, மே.29-
மூன்று மொழிக் கொள்கையை தமிழகத்தில் திணிக்கக் கூடாது என ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கை: சிபிஎஸ்இ பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் மூன்று மொழிகள் கட்டாயம் என்றும், அதில் இரண்டு மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்றும் சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பு தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக 9ம் வகுப்பு மாணவர்களுக்கு குறுகிய காலத்திலேயே புதிய மொழியை கட்டாயப்படுத்துவது மாணவர்களின் கல்விச் சுமையையும், மன அழுத்தத்தையும் அதிகரிக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளது.ஏற்கனவே தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருமொழிக் கொள்கை நடைமுறையில் இருந்து வருகிறது. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளின் மூலம்



தமிழக மாணவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, உயர் கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்றனர். இந்நிலையில், தமிழகத்தின் தனித்துவமான மொழிக் கொள்கையை புறக்கணித்து மூன்றாவது மொழியை திணிக்க முயற்சிப்பது மாநில உரிமைகளில் தலையிடுவதாகும்.மொழி என்பது கற்றலின் கருவி மட்டுமல்ல; அது ஒரு இனத்தின் அடையாளமும், பண்பாட்டின் வெளிப்பாடும் ஆகும். அதனால் மொழிக் கொள்கை என்பது மக்களின் விருப்பத்தையும், மாநிலங்களின் தனித்துவத்தையும் மதித்து அமல்படுத்தப்பட வேண்டும். ஒரே மாதிரியான கல்விக் கொள்கையை நாடு முழுவதும் திணிப்பது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானதாகும்.குறிப்பாக, தமிழக மாணவர்களுக்கு தேவையற்ற கல்விச் சுமையை ஏற்படுத்தும் வகையில் மூன்று மொழிக் கொள்கையை திணிப்பது மாணவர்களின் மனநலத்தையும் கல்வித் தரத்தையும் பாதிக்கும். புதிய மொழியை திடீரென கற்க வேண்டிய சூழல் உருவானால், அது கிராமப்புற மற்றும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கூடுதல் சிரமத்தை ஏற்படுத்தும். எனவே, சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பை மத்திய கல்வி அமைச்சகம் உடனடியாக திரும்பப் பெற வேண்டும். தமிழகத்தின் இருமொழிக் கொள்கையை மதித்து, மாநில மக்களின் உணர்வுகளையும் கல்வி உரிமையையும் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.தமிழகத்தில் மூன்று மொழிக் கொள்கையை திணிக்கும் எந்த முயற்சியையும் பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக எதிர்க்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்



■ தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர்ப்பு நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. அசோக் குமார் TPS. பொதுமக்களிடம் புகார் மனுக்களை பெற்று, அவர்களின் குறைகளை கேட்டு அறிந்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விரைந்து நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கினார்.

## “முதல்வர் விஜய்யின் உத்தரவுகள் துளியும் செயல்பாட்டுக்கு வருவதில்லை” தினகரன்

சென்னை, மே.29-
கோடம்பாக்கம் அருகே 16 வயது சிறுவனுக்கு பாலியல் ரீதியில் தொல்லை கொடுத்த தலைமைக் காவலர் கைது செய்யப்பட்டுள்ளார். முதல்வர் விஜய் காவல் அதிகாரிகளுடன் நடத்தும் ஆலோசனைக் கூட்டங்களும், அதிகாரிகளுக்கு அவர் போடும் உத்தரவுகளும் துளியளவும் செயல்பாட்டுக்கு வருவதில்லை என்பதை அன்றாடம் அரங்கேறும் குற்றச் சம்பவங்களே சாட்சியாக அமைந்துள்ளன’ என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘சென்னை கோடம்பாக்கம் பகுதியில் 16 வயது



சிறுவனின் வாயில் மதுவை ஊற்றி பாலியல் தொந்தரவு கொடுத்ததாகத் தலைமைக் காவலர் ஒருவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.தமிழகத்தில் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்புமிக்க காவல்துறையில் பணியாற்றும் காவலரே இத்தகைய மனிதநேயமற்ற செயலில் ஈடுபட்டிருப்பது ஒட்டுமொத்த காவல்துறைக்கும் பெரும் இழுக்கை உண்டாக்கியுள்ளது.சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு தொடர்பாக முதல்வர் ஜோசப் விஜய் காவல் அதிகாரிகளுடன் நடத்தும் ஆலோசனைக் கூட்டங்களும், அதிகாரிகளுக்கு அவர் போடும் உத்தரவுகளும் துளியளவும் செயல்பாட்டிற்கு வருவதில்லை என்பதை அன்றாடம் அரங்கேறும் குற்றச் சம்பவங்களே சாட்சியாக அமைந்துள்ளன. எனவே, தன்னுடைய பொறுப்பையும் கடமையையும் மறந்து சிறுவனுக்கு பாலியல் ரீதியாகத் தொல்லை கொடுத்ததாகக் கைதாகியிருக்கும் தலைமைக் காவலர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, தமிழகத்தில் சீரழிந்து கொண்டிருக்கும் சட்டம் ஒழுங்கின் மீது கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும் என தவெக அரசை வலியுறுத்துகிறேன்.

## “கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை பிரதமர் மோடி ‘ஹிட்’ கொண்டு விரட்டியடிப்பார்” தமிழிசை

திருவண்ணாமலை, மே.29-
“கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை பிரதமர் மோடி 'ஹிட்' கொண்டு விரட்டியடிப்பார்,” என பாஜக மூத்த தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “அதிமுகவில் எம்எல் ஏக்களாக இருந்தவர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்தது குறித்து அவர்களது தொகுதி மக்களுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். மக்களின் தீர்ப்பை



மதிக்காமல் பதவியை ராஜினாமா செய்தது தவறு; தவெக அதை ஊக்குவிப்பது அதைவிட மிக மிக தவறு. கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை பிரதமர் மோடி 'ஹிட்' கொண்டு விரட்டியடிப்பார். இளைஞர்கள் மீது குறை சொல்வது தவறு. அவர்கள் ஆக்கப்பூர்வமாக இருக்கின்றனர். பிரதமர் மோடி நான்கு நாட்களுக்கு முன்னர், 51 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறார்.கரப்பான்பூச்சி ஜனதா கட்சி விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் சூழ்ச்சி செய்கிறார்கள். கரோனாவையே எதிர்கொண்ட பிரதமர் மோடி, கரப்பான்பூச்சி கட்சியையும் எதிர்கொள்வார்” என்று அவர் கூறினார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அய்யூர் கிராமத்தில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு, முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் வளாகத்தில், இஸ்லாமியர்கள் ஊர்வலமாக வந்து சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். அதனை தொடர்ந்து பக்ரீத் தின வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

## ஆலத்தூர் தாலுகா இரூர் கல்குவாரியில் விதிமுறை மீறி கல்உடைத்த பொக்லைன் வாகனம் பறிமுதல்

### தாசில்தார் கவிதா அதிரடி நடவடிக்கை

பாடாலூர், மே.29-
பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா இரூர் கிராமத்தில் கூத்தனூர் செல்லும் சாலையில் கல்குவாரி செயல்படுகிறது. இந்த கல்குவாரிக்கு காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை கற்களை வெட்டி எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தைவிட கூடுதலாக கல்குவாரியில் பொக்லைன் வாகனம் மூலம் பாறைகள் உடைக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது.



இதுகுறித்து கடந்த 25ம் தேதி ஆலத்தூர் தாசில்தார் கவிதாவிற்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அவர் விரைந்து சென்று கல்குவாரியில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது கல்குவாரியில் மாலை 6 மணிக்கு மேல் பொக்லைன் எந்திரம் மூலம் கற்களை உடைத்து கொண்டிருந்தனர். தாசில்தார் கல்குவாரிக்குள் இறங்கி சென்று பார்த்ததும், அங்கிருந்து தொழிலாளிகள், பொக்லைன் ஆபரேட்டர்கள் தப்பி ஓடினர். இதையடுத்து கல் உடைக்க பயன்படுத்திய ராட்சத பொக்லைன் எந்திரத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

2 நாட்களாக பொக்லைன் வாகனத்தை ஓட்டுவதற்கு ஆப்ரேட்டர் மற்றும் போதிய வாகன வசதிகள் கிடைக்கவில்லை. இதையடுத்து நேற்று பொக்லைன் வாகனம் கல்குவாரியில் இருந்து கொண்டுவரப்பட்டு, பாடாலூர் போலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக இரூர் கிராம நிர்வாக அலுவலர் தங்கராஜ் கொடுத்த புகாரின் பேரில் பாடாலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

## வானிலை முன்னறிவிப்பு: நீலகிரி, தேனி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை, மே.29-
தமிழகத்தில் நீலகிரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் (மே 29) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 5.8 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.மத்திய கிழக்கு தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ முதல் 7.6 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது இதன் காரணமாக தமிழகத்தில் (மே 29) ஓரிரு இடங்களிலும், 30ம் தேதி முதல் ஜூன் 3ம் தேதி வரை ஒருசில



இடங்களிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் நாளை தேனி, திண்டுக்கல், நீலகிரி, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களிலும், 30ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், திண்டுக்கல், நீலகிரி, தேனி, மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலும், 31ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், திருப்பத்தூர், திருப்பூர், சேலம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கரூர், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை நாளையும், நாளை மறுதினமும் ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.31ம் தேதி அதிகபட்ட வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்க வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 105 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் ஜூன் 1ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூரில் 6 செமீ, சிவலோகத்தில் 5 செமீ, திருப்பூர் மாவட்டம் அவினாசி, தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில், கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாறு, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு, சேலம் மாவட்டம் ஆனைமடுவில் தலா 4 செமீ மதுரை மாவட்டம் எழுமலை, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, தூத்துக்குடி விமான நிலையத்தில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது



## போளூரில் பக்ரீத் பண்டிகை சிறப்புத் தொழுகை! கட்டி அணைத்து 'ஈத் முபாரக்' வாழ்த்துப் பரிமாற்றம்

போளூர், மே.29-
திருவண்ணாமலை மாவட்டம் போளூர் நகராட்சி கசீருல் ஜமாஅத் அஹ்லுஸ்ஸுன்னத் பெரிய மஸ்ஜித் சார்பில், பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு ஈத்கா மைதானத்தில், சிறப்புப் பெருநாள் தொழுகை மிக விமரிசையாக நடைபெற்றது. பெரிய மஸ்ஜித் இமாம் மற்றும் கதீப் மௌலவி முஹம்மது இக்பால் தலைமையில் பையான் (மார்க்க உரை), பக்ரீத் சிறப்புத் தொழுகை, அதனைத் தொடர்ந்து குத்பா உரை மற்றும் உலக நன்மைக்கான சிறப்பு துவா ஆகியவை நடைபெற்றன. இஸ்லாமியப் பெரியவர்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் என அனைவரும் புத்தாடை அணிந்து, நறுமணம் பூசி பக்தி உணர்வுடன் இந்தச் சிறப்புத் தொழுகையில் கலந்துகொண்டனர். தொழுகை நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, அங்கிருந்தவர்கள் ஒருவரையொருவர் கட்டி அணைத்து தங்களது பக்ரீத் திருநாள் (ஈத் முபாரக்) வாழ்த்துகளை நெகிழ்ச்சியோடு பரிமாறிக்கொண்டனர்.
இவ்விழாவிற்கான அனைத்து சிறப்பான ஏற்பாடுகளையும் போளூர் பெரிய மஸ்ஜித் ஜமாத்தார்கள், மஸ்ஜித் ஊழியர்கள் மற்றும் இஸ்லாமியத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஒருங்கிணைந்து செய்திருந்தனர்.

## கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள பொழுதுபோக்கு பூங்கா ஒன்றில் ராட்டினம் உடைந்தது

கேரளா, மே.29-
கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள பொழுதுபோக்கு பூங்கா ஒன்றில் சுற்றிக் கொண்டிருந்த ராட்டினத்தின் கம்பி திடீரென உடைந்ததில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 பேர் உட்பட பலர் காயம் அடைந்துள்ளனர். காயமடைந்த ஐந்து பேரும் திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் சிலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. திருவனந்தபுரம், வேம்பாயத்தில் உள்ள ஹேப்பிலாந்து பொழுதுபோக்கு பூங்காவில் வியாழக்கிழமை ராட்டினம் சரிந்து விழுந்ததில், இரண்டு குழந்தைகள் உட்பட ஐந்து



பேர் காயமடைந்தனர். பார்வையாளர்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்தபோது, ராட்டினத்தின் கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டு அது தரையில் சரிந்து விழுந்ததில் இந்த விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. சம்பவம் நடந்த நேரத்தில், சுமார் 26 முதல் 30 பேர் அந்த ராட்டினத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது. காயமடைந்த ஐந்து பேரும் திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் சிலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. விபத்துக்கான காரணம் மற்றும் பொழுதுபோக்கு பூங்காவில் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பது குறித்து விரிவான விசாரணை நடத்தி வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்

## "காவலர் மீது தவெக குண்டர்கள் தாக்குதல். அரசு மீது வானதி சீனிவாசன் காட்டம்

சென்னை, மே.29-
"கும்பகோணத்தில் தவெக நிர்வாகிகள் இருவர் சாலையை மறித்து வைத்த பேனரை அகற்றுமாறு கூறிய காவலரின் கையை உடைத்துள்ள சம்பவம் அதிர்ச்சி அளிக்கிறது. காவலர்கள் மீதே தாக்குதல் நிகழ்த்தும் அளவிற்கு தவெகவில் குண்டர்கள் உருவாகி வருவது இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு எந்த அளவுக்கு உள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டு" என பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் தெரிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கும்பகோணத்தில் தவெக நிர்வாகிகள் இருவர்



சாலையை மறித்து வைத்த பேனரை அகற்றுமாறு கூறியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் காவலரின் கையை உடைத்துள்ள சம்பவம் அதிர்ச்சி அளிக்கிறது. முன்பிருந்த ஆட்சியில் தமிழக மக்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கும் தான் பாதுகாப்பற்ற சூழல் நிலவியது. ஆட்சி மாறினால் நிலைமை மாறிவிடும் என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கைக் காக்கும் காவலர்கள் மீதே தாக்குதல் நிகழ்த்தும் அளவுக்கு தவெகவில் குண்டர்கள் உருவாகி வருவது இந்த ஆட்சியிலும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு எந்த அளவுக்கு உள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டு. முன்பெல்லாம் காவல் துறையினரைக் கண்டோலே பயந்த காலம் போய் இன்று புதிதாக முளைக்கும் ரவுடிகளாலும், குண்டர்களாலும் காவலர்களுக்கே பாதுகாப்பில்லாத சூழல் ஏற்பட்டிருப்பதுதான் வேதனை' எனத் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேல் வான்வெளி தாக்குதல்: ஹமாஸ் புதிய ராணுவ தளபதி பலி

டெய்ர் அல் பலாஹ், மே.29-
காசா நகரின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித்தாக்குதல்களில் ஹமாஸ் புதிய ராணுவ தளபதி உள்பட மூன்று பேர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் காயமடைந்தனர். கடந்த அக்டோபர் மாதம் இஸ்ரேலுக்கும், ஹமாசுக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்தம் இன்னும் உறுதியற்றதாகவே உள்ளது. போர் நிறுத்தம் அமலுக்கு வந்த பின்னரும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் காசா நகரை குறித்து இஸ்ரேல் ராணுவம் நேற்று வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்த தாக்குதல்களில் சுமார் 12 பேர் காயமடைந்தனர். மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்களின் உடல்கள் காசாவின் ஷிபா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன. இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில்,''ஹமாஸின் ராணுவப் பிரிவின் புதிய தலைவரைக் குறித்து தாக்குதல் நடத்தப்பட்டது. அவரது பெயர் முகமது ஓடே. அவர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான போரைத் தூண்டிய 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி நடத்திய தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவர்" என்று குறிப்பிட்டுள்ளனர். இதற்கிடையே முகமது ஓடே என்றழைக்கப்படும் ஒரு நபர் தாக்குதலில் கொல்லப்பட்டதாக அவரது குடும்பத்தினர் கூறினர். ஆனால் அவர் ராணுவப் பிரிவின் தலைவர் என்பதை அவர்கள் உறுதிப்படுத்தவில்லை. ஹமாஸ் இதுகுறித்து எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை

## சாலைகளில் தொழுகைக்கு அனுமதி மறுத்த நிலையில் உ.பி.யில் காவடி யாத்திரைக்காக சாலைகள் மூடல்

புதுடெல்லி, மே.29-
இன்று நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் பக்ரீத் கொண்டாடப்படுகிறது. ஜம்மு காஷ்மீர் உட்பட சில பகுதிகளில் பக்ரீத் நேற்றே கொண்டாடப்பட்டது. வழக்கமாகப் பக்ரீத் சிறப்பு தொழுகையின் போது மசூதிக்குள் போதுமான இட வசதி இருப்பதில்லை. அதனால், மசூதிக்கு வெளியே சாலைகளிலும் தொழுகை நடத்தி வந்தனர். தற்போது இதற்கு எதிர்ப்புகள் கிளம்பி உள்ளன. உ.பி.யில் சாலைகளில் தொழுகை நடத்த அனுமதி இல்லை. மத வழிபாட்டுத் தலங்களில் மட்டுமே தொழுகை நடத்த வேண்டும். அதிக எண்ணிக்கையில் வரு



வோரை சமாளிக்க சுழற்சி முறையில் தொழுகை நடத்தலாம் என்று முதல்வர் யோகி ஆதித்ய நாத் அறிவுறுத்தி இருந்தார். இதேபோல், பாஜக ஆளும் டெல்லி, மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களிலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி பக்ரீத் நாளான இன்று, அரசு விதிகளை மீறி சாலைகளில் தொழுகை நடத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க டிரோன்கள் மூலம் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது. இந்நிலையில், உ.பி. எதிர்க்கட்சியான சமாஜ்வாதியின் முராதாபாத் தொகுதி எம்.பி. எஸ்.டி.ஹசன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: வழிபாடுகள் குறித்த சட்டங்கள், விதிமுறைகள் அனைவருக்கும் சமமாகப் பொருந்தும் வகையில் இருக்க வேண்டும். பக்ரீத் தொடர்பான அறிவிப்புகள், இந்து சகோதரர்களின் வாக்குகளைப் பிரிக்கும் நோக்கிலேயே வெளியிடப்படுகின்றன. முராதாபாத் பகுதியிலும் கடந்த 2 ஆண்டுகளாகச் சாலைகளில் தொழுகை நடத்துவதில்லை. தற்போது, ஈத்கா வளாகத்துக்கு உள்ளேயே சுழற்சி முறையில் தொழுகை நடத்தப்படுகிறது. ஒரு மணி நேரம் மட்டுமே நடைபெறும் இந்த சிறப்பு தொழுகைக்கு ஏன் எதிர்ப்பு ?. பொது மக்களின் போக்கு வரத்துக்காகவே சாலைகள் பயன்பட வேண்டும். ஆனால், மக்கள் சாலைகளிலேயே தங்கள் வாழ்வாதாரத்துக்கான தொழில்களை செய்கின்றனர். வாகன டயர்களுக்கு பஞ்சர் ஒட்டுபவர்கள் முதல் ஏழை, எளிய மக்கள் வரை, தங்கள் பொருட்களைச் சாலைகளிலேயே வைத்துப் பிழைப்பு நடத்துகின்றனர். அதுவே அவர்களின் வாழ்வாதாரமாக இருப்பதால், அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவது முறையல்ல.தவிர, விசேஷ நாட்களில் இலவச உணவு வழங்கும் கூடாரங்கள் மற்றும் பல்வேறு வகையான மதச் செயல்பாடுகள் சாலைகளிலேயே நடைபெறுகின்றன. 'காவடி யாத்திரை' போன்ற நிகழ்வுகளுக்காகச் சாலைகள் மாதக் கணக்கில் மூடப்படுகின்றன. இதனால் அவ்வழியே செல்பவர்களுக்குப் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. சட்டங்கள் இயற்றப்பட்டால், அவை அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் பொருந்தக் கூடியதாக இருக்கக் கூடாது.

## வில்லியனூர் திருக்காமீஸ்வரர் கோயில் தேரோட்டம் கோலாகலம்

புதுச்சேரி, மே.29-
புதுச்சேரி வில்லியனூரில் மிகவும் பிரசித்தி பெற்ற திருக்காமீஸ்வரர் கோயில் தேரோட்டத்தை துணை நிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி ஆகியோர் வடம் பிடித்து தொடங்கி வைத்தனர். இதில் புதுச்சேரி மட்டுமின்றி தமிழகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். புதுச்சேரி மாநிலம் வில்லியனூரில் மிகவும் பழமை வாய்ந்த, பிரசித்திபெற்ற திருக்காமீஸ்வரர் கோயில் உள்ளது. இந்த கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் திருவிழா மிக விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு கடந்த வைகாசி 6ம் தேதி கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. இதையொட்டி தினமும் சாமிக்கு பல்வேறு சிறப்பு அபிஷேகங்களுடன்



சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. தினமும் இரவில் சாமி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று காலை 8.10 மணி அளவில் நடைபெற்றது. இவ்விழாவில் துணை நிலைஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி, அமைச்சர் நமச்சிவாயம், தொகுதி எம்எல்ஏ ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர். முதலில் விநாயகர் தேர் இழுத்து செல்லப்பட்டது. அதன் பின் திருக்காமீஸ்வரர் அம்மன் ஆகிய தேர்கள் இழுத்துச் செல்லப்பட்டன. இந்த தேர் திருவிழாவில் வில்லியனூர் பகுதி மக்கள் மட்டுமல்லாமல் புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் பகுதிகளில் இருந்தும் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.




## சர்வர் மேம்பாடு பணி காரணமாக மின்நுகர்வோருக்கான உயரழுத்த இணைய சேவை இயங்காது
## மின்வாரியம் அறிவிப்பு

சென்னை: மே.29-
சர்வர் மேம்பாடு பணி காரணமாக மின்நுகர்வோருக்கான உயரழுத்த இணைய சேவை இன்று இயங்காது என மின்வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தற்போது பயன்பாட்டில் உள்ள உயர் அழுத்த பில்லிங் தரவுத்தளம் மற்றும் சர்வர் அமைப்பு, உயர் அழுத்த மின் நுகர்வோரின் பில் விவரங்கள், மீட்டர் ரீடிங் தகவல்கள், ஆன்லைன் கட்டண சேவைகள் மற்றும் மொபைல் பயன்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட முக்கியமான வருவாய் சார்ந்த கணினி அமைப்பாக செயல்பட்டு வருகிறது.தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் சார்பில், உயர் அழுத்த மின் நுகர்வோருக்கான பில்லிங் சேவை மற்றும் தரவுத்தள அமைப்பை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த சேவையை மேலும் பாதுகாப்பானதாகவும், வேகமானதாகவும் மாற்றும் நோக்கில், பழைய சர்வரிலிருந்து புதிய மேம்பட்ட சர்வருக்கு தரவுத்தள மாற்று பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. புதிய அமைப்பில் ஆரக்கிள் 19 சி போன்ற சமீபத்திய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.தமிழக நிகழ்வுகள்இத்தகைய மாற்றுப் பணிகள் அரசு விடுமுறை நாளான இன்று (28 ம் தேதி) காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, உயர் அழுத்த பில்லிங் நுகர்வோர் போர்ட்டல் தற்காலிகமாக செயல்படாது. இதனால், உயர் அழுத்த மின் நுகர்வோரும், கள அலுவலர்களும் இணையதள சேவைகளை அணுக முடியாது.பொதுமக்கள் மற்றும் உயர் அழுத்த மின் நுகர்வோர் இதனை கருத்தில் கொண்டு, தங்களது பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டு முடித்துக் கொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த சேவை மேம்பாட்டு நடவடிக்கை, உயர் அழுத்த மின் நுகர்வோருக்கு எதிர்காலத்தில் வேகமான மற்றும் தடையற்ற சேவைகளை வழங்க உதவும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## காரைக்குடியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரத்த பரிசோதனை முடிவை மாற்றி கொடுத்ததால் பரபரப்பு

காரைக்குடி, மே.29-
காரைக்குடியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரத்த பரிசோதனை முடிவை மாற்றி கொடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. காளியப்பன், காளீஸ்வரன் தம்பதியின் 14 வயது மகளுக்கு தொண்டையில் சதை வளர்ந்துள்ளது. சிகிச்சைக்காக சிறுமியின் ரத்த மாதிரி எடுத்து பரிசோதித்துள்ளனர். பரிசோதனை முடிவில் சிறுமியின் ரத்த மாதிரிக்கு பதில் வேறு ஒருவரின்



ரத்த மாதிரி முடிவை அளித்துள்ளனர். சிறுமிக்கு மஞ்சள் காமாலை, கல்லீரலில் பாதிப்பு உள்ளதாக கூறி லேப் டெக்னீசியன் பரிசோதனை முடிவை தந்தார்.மாவட்ட அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததால் தனியார் மருத்துவமனைக்கு சென்றுள்ளனர். தனியார் மருத்துவமனையில் சிறுமியின் ரத்த மாதிரி எடுத்து பரிசோதித்தபோது நலமாக இருப்பது தெரிய வந்தது. தவறான பரிசோதனை முடிவை கொடுத்தது குறித்து மருத்துவமனையில் சிறுமியின் குடும்பத்தினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது

## உயர் கல்வித் துறைக்கு அபாயம்: தவெக அரசுக்கு பெ.சண்முகம் எச்சரிக்கை

சென்னை, மே.29-
உயர் கல்வித் துறையில் மத்திய அரசு, ஆளுநரின் அத்துமீறிய தலையீடுகளுக்கு தமிழக அரசு அடிபணியக் கூடாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் உள்ள அரசு பல்கலைக்கழகங்களின் நிர்வாகப் பணிகளும், கற்றல் செயல்பாடுகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிற சூழல் கவலை அளிக்கிறது. பல பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்கள் இல்லை. 40 சதவிகித ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. ஆய்வுகளின் தரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் ஆர்.என்.ரவி காலத்திய அடாவடி நடவடிக்கைகளினால் இப்போது வரை மொத்தமுள்ள 21 பல்கலைக்கழகங்களில்



16இல் துணைவேந்தர் நியமனங்கள் நடந்தேறாத நிலைமை நீடிக்கிறது. 2026 இறுதி வரை இதே நிலைமை நீடித்தால் 20 பல்கலைக்கழகங்கள் வரை தலைமையற்ற நிலைமைக்கு ஆளாகும் அபாயம் உள்ளது.21 மாநிலப் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் நிரந்தரப் பணியிடங்களின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 8,867 ஆகும். அவற்றில் தற்போது 5,296 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இதன் விளைவாக, காலிப் பணியிடங்களின் சதவிகிதம் 40 ஆக உள்ளது.சென்னை பல்கலைக்கழகத்தின் 71 துறைகளில் 16 துறைகளில் ஒரே ஒரு ஆசிரியர் மட்டுமே நிரந்தரப் பணியில் உள்ளார்; மேலும் 20 துறைகளில் வெறும் இரண்டு ஆசிரியர் மட்டுமே பணியாற்றுகின்றனர். 4 ஆய்வு மையங்களில் எந்த பேராசிரியரும் பணிபுரியவில்லை. மொத்தமுள்ள அங்கீகரிக்கப்பட்ட 534 பணியிடங்களில் பேராசிரியர், இணைப் பேராசிரியர், உதவிப் பேராசிரியர் உள்ளிட்டு 180க்கும் குறைவான அதாவது, மூன்றில் ஒரு பங்கு ஆசிரியர்களே பணியில் உள்ளனர்.பேராசிரியர்களின் பணிச்சுமை அதிகரித்துள்ளது. இதனால் முனைவர் பட்ட மாணவர்களுக்கு போதுமான நேரத்தை, உரிய கவனத்தை அளிக்க முடியாத நிலை தமிழ்நாட்டின் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்றது. இது ஆய்வு வெளியீடுகளின் தரத்திலும் பிரதிபலிக்கிறது. பல்கலைக்கழகங்களில் பேராசிரியர், இணைப் பேராசிரியர், உதவிப்பேராசிரியர் நிரந்தர நியமனங்கள் மேற்கொள்ளப்படாத நிலையில் கவுரவ விரிவுரையாளர்களைக் கொண்டே கற்பித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது மாணவர்களின் எதிர்காலத்தையும் பாதிக்கக் கூடியதாகும். மாணவர் நலன் முன்னிட்டும், உயர் கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு அரசின் உடனடித் தலையீடுகள் தேவைப்படுகிறது.சட்டரீதியான வழிவகைகளை ஆராய்ந்து, நீதிமன்ற வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வந்து 16 பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமித்து பல்கலைக்கழகங்களின் சுயேட்சையான செயல்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும். ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 2025 டிசம்பரில் நடத்தப்பட்ட 2708 உதவி பேராசிரியர்களுக்கான தேர்வு முடிவுகளை விரைவில் வெளியிட வேண்டும்.இது தவிர உள்ள அனைத்து காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டுமென்றும், வரும் காலங்களில் ஆசிரியர் தேர்வு வாரியம் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உதவிப் பேராசிரியர் தேர்வு நடத்தி அவ்வப்பொழுது காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்றும், உயர் கல்வித் துறையில் அரசு, ஆளுநரின் அத்துமீறிய தலையீடுகளுக்கு அடிபணியக் கூடாதென்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தமிழக அரசை வலியுறுத்துகிறது" என்று அவர் தெரிவித்துள்ளார்.



■ ரெட்டியார்பட்டியில், திமுக தலைவர் ஸ்டாலின் ஆணைக்கிணங்கவும், இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்ட விளை யாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஐயம் பெருமாள் ஏற்பாட்டில், நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட விளையாட்டுமேம்பாட்டு அணி அமைப்பாளர் ஐயம்பெருமாள் தலைமை தாங்கினார். கிளைக் கழகச் செயலாளர் மாஞ்சோலைதுறை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் சார்லஸ் வரவேற்று பேசினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் திமுக மாவட்ட கழக செயலாளர் சிவ பத்மநாதன் கலந்து கொண்டு பொது மக்களுக்கு மோர் மற்றும் பழங்கள் வழங்கினார்.



## காலை 9 முதல் 6 மணி வரை மக்கள் மனு அளிக்கலாம்! திருப்பூரில் புதிய MLA அலுவலகம் திறப்பு

திருப்பூர், மே.29-
திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா கணபதி ஹோமத்துடன் தொடங்கி, 10 மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பாலமுருகன் அவர்களால் ரிப்பன் வெட்டி கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய எம்.எல்.ஏ, திருப்பூரில் குடிநீர், சாலை, தெருவிளக்கு போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், குப்பை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முதலமைச்சரைச் சந்திக்க உள்ளதாகவும், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கைக்குப் பணம் வசூலித்தால் ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார். பொதுமக்கள் தினமும் காலை 9 முதல் மாலை 6 மணி வரை அலுவலகத்தில் தன்னை நேரில் சந்தித்துக் குறைகளைத் தெரிவிக்கலாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பொறுப்பாளர்கள் பாண்டியன், பாபு, குத்புதீன், மோகன், அமர்நாத், ஜே.கே. சாமி, செல்லப்பாண்டி, போஸ், ரஞ்சித், கௌதம், சந்துரு, யுவராஜ், சரவணன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ புதுச்சேரி கோடை வெயிலின் தாக்கம் காரணமாக, ஜூன் 1 ஆம் தேதி திறக்கப்பட இருந்த நிலையில் பள்ளிகள், தற்போது ஜூன் 4ஆம் தேதி திறக்கப்படும் என புதுவை முதலமைச்சர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.



## உலக பட்டினி தினம் எம்எல்ஏ விஜய் அன்பன் கல்லானை ஆலோசனையில் அசைவ விருந்து

அலங்காநல்லூர், மே.29-
உலக பட்டினி தினத்தை முன்னிட்டு, மதுரை மாவட்டம் பாலமேடு அருகில் உள்ள மறவர்பட்டி கிராமத்தில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பொதுமக்களுக்கு அசைவ உணவுடன் கூடிய அன்னதானம் மற்றும் இனிப்புகள் வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் உத்தரவின் பேரிலும், மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் விஜய் அன்பன் கல்லானை அவர்களின் ஆலோசனையின் பேரிலும் இந்த நற்பணித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. தவெக புறநகர் மாவட்ட செயலாளர் விஷால்கிருஷ்ணா தலைமையில், ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ் முன்னிலையில், வடக்கு ஒன்றிய நிர்வாகி கார்த்திக் அவர்களின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அன்னதான நிகழ்ச்சியில், 100க்கும் மேற்பட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு அசைவ உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. உலக பட்டினி தினத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமைந்த இந்த சமூகப்பணிக்கு அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்தது .இந்நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றிய நிர்வாகி தனசேகரன், பாலமேடு பேரூர் செயலாளர் புகழ், அலங்காநல்லூர் பேரூர் செயலாளர் தளபதிரஞ்சித், இணைச் செயலாளர் ராமநாதன், மறவர்பட்டி கிளைச் செயலாளர் ராஜா, வலையபட்டி கிளைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் நடராஜன், மேட்டுப்பட்டி ராஜா, மற்றும் கண்ணன் உள்பட தவெக முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஏழை எளியோரின் பசி ஆற்றிய தவெக! சேலத்தில் மக்கள் மத்தியில் குவியும் பாராட்டுக்கள்



சேலம், மே.29-
உலக பட்டினி தினத்தை முன்னிட்டு, சேலம் நெத்திமேடு ஆஞ்சநேயர் கோயில் அருகில் தமிழக வெற்றி கழகம் சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.தமிழக வெற்றி கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான ஜோசப் விஜய், கழகப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆகியோரின் அறிவுறுத்தலின்படியும், தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் இந்த நற்பணித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இச்சமூகப்பணி நிகழ்வில், அப்பகுதியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு ஆர்வமுடன் அன்னதான உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து இது போன்ற சமூக நலத்திட்டங்கள் மூலம் பொதுமக்களுக்கு உதவிகள் வழங்கப்படும் எனத் தவெக நிர்வாகிகள் உறுதிபடத் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட தவெக 49வது வார்டு கொண்டலாம்பட்டி செயற்குழு உறுப்பினர் சத்யா மற்றும் 49வது வார்டு கொண்டலாம்பட்டி பகுதி1 கழக நிர்வாகிகள் திவ்யா, நாகராஜ், சரவணன், விஜயகாந்த், திருநாவுக்கரசு, தினேஷ், யுவராஜ், தேவா, நந்தகுமார், கார்த்திகேயன், தனுஷ், சரவணன் (2), ஆறுமுகம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குதிரை பேரம் : தமிழ்நாட்டைப் பார்த்து இந்தியா சிரிக்கிறது

## சிபிஐ விசாரணை நடத்த இந்து முன்னேற்றக் கழகத் தலைவர் கோபிநாத் அதிரடிப் பேட்டி



திருப்பூர், மே.29-
"ராஜாஜி, எம்.ஜி.ஆர் போன்ற மாமேதைகள் ஆண்ட தமிழகத்தைப் பார்த்து இன்று ஒட்டுமொத்த இந்தியாவும் சிரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது" எனத் திருப்பூரில் செய்தியாளர்களைச் சந்தித்த இந்து முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வழக்கறிஞர் கோபிநாத் சாடியுள்ளார்.
அதிமுகவில் இருந்து விலகி தவெகவில் இணைவதற்குப் பின்னணியில் முழுக்க முழுக்கக் குதிரை பேரம் நடைபெறுவதாகவும், சாமானியர்களின் வரிப்பணத்தில் தேர்தல் நடத்தி வெற்றி பெற்ற பின், உடனடியாக ராஜினாமா செய்வது மக்களை முட்டாளாக்கும் செயல் என்றும் அவர் குற்றம் சாட்டினார். இது குறித்து உடனடியாக சிபிஐ விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்திய அவர், படத்தில் நடிக்கும் போது விஜய் என்றும், முதலமைச்சர் ஆன பின் ஜோசப் விஜய் என்றும் கூறுவது தமிழக மக்கள் எவ்வளவு முட்டாள்களாக உள்ளனர் என்பதற்குச் சான்று என்றார்.
மேலும், திமுக கூட்டணியில் இருந்த கட்சிகள் கொள்கையை நடுத்தெருவில் விட்டு, தவெகவிற்குச் சென்றது கண்டிக்கத்தக்கது என்றும், காங்கிரஸ் கட்சி தேசிய அரசியலைப் போலவே இங்கும் அந்தர் பல்டி அடிக்கும் என்றும் குறிப்பிட்டார். சினிமா போல காட்சிகளைச் செய்யாமல், அதிகாரிகள் நீக்கம் போன்ற நடவடிக்கைகளைத் தவிர்த்து, குதிரை பேரம் இல்லாத நேர்மையான ஆட்சியை விஜய் தர வேண்டும். தவறு செய்தால் கண்டிப்போம் என்றும் அவர் தனது பேட்டியில் தெரிவித்தார்.
தமிழக அரசியல் களம் தவெகவின் வருகைக்குப் பின் பெரும் அதிர்வுகளைச் சந்தித்து வரும் நிலையில், இந்து முன்னேற்றக் கழகத் தலைவர் கோபிநாத்தின் இந்தச் சிபிஐ விசாரணை கோரிக்கை விவாதங்களை மேலும் சூடாக்கியுள்ளது. மக்கள் வரிப்பணத்தில் நடக்கும் தேர்தல்களும், மக்கள் பிரதிநிதிகளின் கட்சித் தாவல்களும் ஜனநாயகத்தின் மாண்பைக் கேள்விக்குள்ளாக்குவது உண்மைதான். புதிய அரசியல் மாற்றங்கள் நேர்மையான வழியில் அமைய வேண்டும் என்பதே தமிழ்நாட்டு பிரஜைகளின் முக்கிய எண்ணமாக உள்ளது.



## சேலம் மேட்டூரில் மாநகராட்சி குடிநீர் திட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் அதிரடி உள்ளிருப்பு போராட்டம்

மேட்டூர், மே.29-
மேட்டூர் அருகே தொட்டில்பட்டியில் செயல்பட்டு வரும் சேலம் மாநகராட்சி தனி குடிநீர் திட்டத்தின் ஒப்பந்த தொழிலாளர்கள், தங்களுக்கு உரிய ஊதிய உயர்வு வழங்கக்கோரி இன்று அலுவலத்தின் முன்பு அமர்ந்து அதிரடி உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
காவிரி ஆற்றில் நீரேற்று நிலையம் அமைத்து சேலம் மாநகராட்சிக்கு நாளொன்றுக்கு 155 எம்.எல்.டி தண்ணீர் விநியோகம் செய்யும் இந்த முக்கியப் பணியில், தனியார் நிறுவனம் மூலமாக 21 ஒப்பந்த தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கடந்த 13 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பணியைச் செய்து வரும் நிலையிலும், தங்களுக்கு உரிய ஊதிய உயர்வு வழங்கக்கோரி பலமுறை அதிகாரிகளுக்கு மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் புகாரளித்துள்ளனர்.
ஒரு நாளைக்கு 1,200 ரூபாய் வழங்க வேண்டிய இடத்தில், தனியார் நிறுவனம் தங்களுக்கு வெறும் 560 ரூபாய் மட்டுமே ஊதியமாக வழங்குவதாகவும், எனவே தங்களுக்கு மாநகராட்சி மூலமாக நேரடியாக ஊதியம் வழங்க வேண்டும் என்றும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், தங்களுக்குச் சீருடை, கையுறை, காலணி போன்ற அடிப்படை பாதுகாப்பு உபகரணங்களோ, அடையாள அட்டை, வருகைப் பதிவேடு மற்றும் விடுமுறை உள்ளிட்ட எந்தவொரு சட்டப்பூர்வ உரிமைகளோ வழங்கப்படுவதில்லை என அவர்கள் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.



■ புதுச்சேரி வில்லியனூர் கோகிலாம்பிகை உடனுறை திருக்காமீஸ்வரர் கோயில் திருத்தேர் திருவிழா இன்று நடைபெற்றது. இதில் துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதன், முதலமைச்சர் ரங்கசாமி, அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் கலந்து கொண்டு திருத்தேர் வடம் பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்தனர். அதனை தொடர்ந்து அமைச்சர் நமச்சிவாயம் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர்.



■ அக்னி நட்சத்திரம் நிறைவு அடைவதை முன்னிட்டு புதுச்சேரி அருள்மிகு மணக்குள விநாயகர் கோவிலில் மூலவருக்கு 1008 இளநீர் அபிஷேகம் மற்றும் தீபராதனை நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வழிபாடு செய்தார். முன்னதாக சட்டமன்ற உறுப்பினர் விக்னேஷ் கண்ணன் துணைநிலை ஆளுநரை வரவேற்றார்.



■ சேலம் மேட்டு பிள்ளையார் கோயில் தெரு சந்து, "ஸ்ரீசக்தி மாரியம்மன் கோயில்" 32 ஆம் ஆண்டு திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 14ஆம் நாள் வியாழக்கிழமையன்று மதியம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும், மாலை சிறப்பு மேளதாளம் முழங்க சுவாமி திருவீதி உலா நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, வெள்ளிக்கிழமை காலை மஞ்சள் நீராட்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அ.கோவில்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்தாலம்மன் மற்றும் ஸ்ரீ கோட்டைகருப்பசாமி உட்பட ஒன்பது தெய்வங்களின் உற்சவ விழா நிகழ்ச்சி மிக விமரிசையாக நடைபெற்றது. இத்திருவிழாவின் தொடக்கமாக ஒன்பது தெய்வங்களுக்கும் கனி மாற்றுதல் நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து இடையபட்டி கிராமத்திற்குச் சென்று கணக்குப்பிள்ளையை அழைத்து வரும் நிகழ்வும் நடைபெற்றன. இறுதியாகப் பல்லயம் பிரித்தலுடன் திருவிழா இனிதே நிறைவு பெற்றது. இந்த ஆன்மீகத் திருவிழாவுக்கான அனைத்து சிறப்பான ஏற்பாடுகளையும் அ.கோவில்பட்டி மரியாதைக்காரர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஒருங்கிணைந்து செய்திருந்தனர்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000